செய்தி வெளியீடு எண் : 1447 நாள்:30.12.2021

# செய்தி வெளியீடு

## தென்னை விவசாயிகளுக்கு அழைப்பு

தமிழ்நாட்டில் தென்னை பிரதான பயிராக உள்ளது. மத்திய அரசு தேங்காய் பருப்புக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.10335/-க்கு குறைந்தபட்ச ஆதார விலையாக நிர்ணயித்துள்ளது.

தமிழ்நாட்டில் 20 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் மூலம் தேங்காய் பருப்பு பரிவர்த்தனை செய்யப்பட்டு வருகிறது. அவை கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலை, கிணத்துக்கடவு, நெகமம், ஈரோடு மாவட்டத்திலுள்ள பூதப்பாடி, அந்தியூர், அவல்பூந்துறை, கோபிச்செட்டிபாளையம், கொடுமுடி, சத்தியமங்கலம், எழுமாத்தூர், வெப்பிலி, நாமக்கல் மாவட்டத்திலுள்ள இராசிபுரம், பரமத்திவேலூர், திருப்பூர் மாவட்டத்திலுள்ள உடுமலைப்பேட்டை, பெதப்பம்பட்டி, காங்கேயம், வெள்ளக்கோயில், மூலனூர், முத்தூர், மதுரை மாவட்டத்திலுள்ள த.வாடிப்பட்டி ஆகும்.

மேலும், இ-நாம் திட்டத்தின் மூலம் 13 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் (ஆனைமலை, ஒட்டன்சத்திரம், அந்தியூர், கோபிச்செட்டிப்பாளையம், சத்தியமங்கலம், உசிலம்பட்டி, பரமத்திவேலூர், தேனி, பெதப்பம்பட்டி, உடுமலைப்பேட்டை, வெள்ளக்கோயில், குடியாத்தம் மற்றும் இராஜபாளையம்) மின்னணு பரிவர்த்தனை செய்யப்பட்டு வருகிறது. இந்த ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் தேங்காய் பருப்பை காயவைப்பதற்கான உலர்கள வசதியும், தேங்காயை தேங்காய் பருப்பாக மாற்றுவதற்கு உலர்த்தும் எந்திர வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், விலை வீழ்ச்சி காலங்களில் விவசாயிகள் தங்கள் தேங்காய் பருப்பு மூட்டைகளை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிட்டங்கிகளில் இருப்பு வைத்து 5 சதவிகித வட்டியில் 6 மாதங்கள் வரை அதிகபட்சம் ரூ.3.00 இலட்சம் வரை கடன் பெறும் வசதியும் உள்ளது (முதல் 15 நாட்களுக்கு வட்டி இல்லை).

தேங்காய் பருப்புக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.10335/–க்கு குறைந்தபட்ச ஆதார விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் (கிலோ ஒன்றுக்கு ரூ.103.35/–) இன்று (29.12.2021) ஈரோடு மாவட்டம் பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் அதிகபட்சமாக குவிண்டால் ஒன்றுக்கு **ரூ.10476/–** க்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

எனவே, தென்னை விவசாயிகள் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை அணுகி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், இது தொடர்பான விவரங்களுக்கு வேளாண்மை துணை இயக்குநர் கைபேசி எண் 9445657993–ஐ தொடர்பு கொள்ளவும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**